செய்தி வெளியீடு எண்: 160 நாள் : 15.03.2016

**<u>தேர்தல் நன்னடத்தை விதி – உரிய ஆவணங்கள் இல்லாததால் பறக்கும் படை, கண்காணிப்பு குழுவினரால் 12.03.2016 வரை பறிமுதல் செய்யப்பட்ட தொகை ரூ.7 கோடியாகும்.</u>**

•••••••••

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் நன்னடத்தை விதியினால் 12.03.2016 அன்று உரிய ஆவணங்கள் இல்லாத நிலையில் பல்வேறு மாவட்டங்களில் பறக்கும் படையினரால் ரூ.11,04,900/– மற்றும் 78,300 மி.லி மதுவகைகள், 27 நைலான் புடவைகள் போன்றவை பறிமுதல் செய்யப்பட்டன.

இதில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.1.50 லட்சம், சேலம் மாநகரில் ரூ.1,10 லட்சம், கிருஷ்ணகிரியில் 7.84 லட்சம் ரூபாய் ரொக்கம் மற்றும் திருவண்ணாமலையில் 27 நைலான் புடவைகள், விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.60,900/–மும், மதுரை, திருவாரூர் நெல்லை மாவட்டம் மற்றும் மதுரை மாநகரில் மதுவகைகளும் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

தேர்தல் விதிமுறைகளை மீறி உரிய அனுமதி பெறாமல் கோயமுத்தூர், மதுரை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் அமைத்த கட்சி கொடிகள், பேனர்கள், கொடிகம்பங்கள் மற்றும் அனுமதி பெறாமல் சுவர்களில் எழுதிய வாசகங்கள், சாலை ஓரங்களில் கொடிகம்பங்கள் வைக்க குழிகள் தோண்டியது போன்ற காரணங்களால் பல்வேறு கட்சிகளை சார்ந்தவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டன.

நிலையான கண்காணிப்பு குழுவின் (SST) சோதனையின் போது, தஞ்சாவூரில் ரூ.50,000/– மதிப்புள்ள பித்தளை, வெள்ளி பாத்திரங்கள், திருச்சியில் ரூ.1,19,320/– விழுப்புரத்தில் ரூ.67,000/– திருப்பூரில் ரூ.2,38 லட்சம் உட்பட 12.03.2016 அன்று மொத்தம் ரூ.4,24,320/–ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டன.

தேர்தல் விதிமுறைகளின்படி 12.03.2016 வரை ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரூ.2,00,88,620/– ரொக்கம் பறக்கும் படையினராலும், ரூ.5,01,71,285 நிலையான கண்காணிப்புக் குழுவினராலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**